# வடக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் கீழான அரச முதியோர் இல்லத்தில் காணப்படும் "சாது சேவிகா" தரம்III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

வடக்கு மாகாண **சமூகசேவைகள் திணைக்களத்தின் கீழான அரச முதியோர் இல்லத்தில் காணப்படும் "சாது சேவிகா" தரம் III** பதவிக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 05.03.2021 ஆகும்.

## 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

02.1 **வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் கீழான அரச முதியோர் இல்லத்தில் காணப்படும் "சாது சேவிகா" தரம் III** பதவிக்குரிய 2013.01.01ஆம் திகதியிலிருந்து செயல்வலுவிலுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள், அரசநிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ஆம் இலக்க 2013.07.03ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் **சாது சேவிகா தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர்.

02.2 போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் நியமனத்திகதியிலிருந்து மூன்று(03) வருடங்களிற்கு தகுதிகாண்கால அடிப்படையில் **சாது சேவிகா தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு **சாது சேவிகா தரம் III** பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து **மூன்று (03)** வருட காலத்திற்குள் **முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில்** சித்தியெய்தல் வேண்டும்.

02.3 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார். இப்பதவிக்கான மொத்த வெற்றிட எண்ணிக்கை 05 ஆகும். **நிலவும் வெற்றிடத்தின் 60%** திறந்த போட்டிப்பரீட்சை மூலம் நிரப்பப்படும்.

## 03. சம்பள அளவுத்திட்டம் :-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 1 - 2016**க்கு ஏற்ப **"சாது சேவிகா" தரம் III** பதவிக்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **27, 140 – 10 x 300 - 11 x 350 - 10 x 495 – 10 x 660 – 45, 540/-**ஆகும். (ரூபா 28,040 என்ற சம்பள படிநிலைக்கு முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்)

## 04. பொதுவான தகைமைகள் :-

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.3 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

**ஆ)** விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும் **(*நேர்முகப் பரீட்சையின் போது தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)**

04.4 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

## 05. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :-

**(அ) கல்வித் தகைமைகள் :-**

க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் **ஒரே அமர்வில் மொழி** (தமிழ் / சிங்களம்/ஆங்கிலம்), **கணிதம்** உள்ளடங்கலாக **நான்கு (04)** பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**அத்துடன்**

க.பொத. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது **ஒரு(01)** பாடத்தில் (பொதுப்பரீட்சை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**(ஆ) தொழில்சார் தகைமை**

அரச முதியோர் இல்லத்தில் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் ஆகக்குறைந்தது **ஆறு(06)** மாதத்திற்கு குறையாத **முதியோர் பராமரிப்பு** பயிற்சியை அல்லது **ஆறு(06)** மாதத்திற்கு குறையாத **முதியோர் பராமரிப்பு தொடர்பான சான்றிதழ் பயிற்சி நெறியினை** பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**(ஆ) வயதெல்லை :-**

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **பதினெட்டு வயதிற்கு (18)** குறையாதவராகவும், **நாற்பது வயதிற்கு (40)** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## 06. ஆட்சேர்ப்பு முறை :-

06.1 எழுத்து மூலப்போட்டிப்பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாக **சாது சேவிகா் தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் விண்ணப்பதாரர்களிடம் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். இவ்விளம்பரத்தின் மூலம் கோரப்பட்ட சகல தகைமைகளும், அதனை நிரூபிக்கும் ஆவணங்களும் நேர்முகப்பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

06.2 மேற்படி எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நிலவும் வெற்றிடத்திற்கமைவாக நியமனத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படுவர்.

## 07. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா 500.00 ஐ **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் **"3401"** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :-

08.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீx29செ.மீ) தாளின் 1 முதல்10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 11 முதல் 15 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **05.03.2021ஆந்** திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 விண்ணப்பப் படிவம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வடக்கு மாகாண சாது சேவிகா தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

08.3 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணபத்தின் நிழற்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.**

08.4 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று (03) நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின், அனுமதி அட்டை கிடைக்காமை தொடர்பில் கீழ்வரும் குறிப்பிலுள்ள விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகம், வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல - 021 221 9939, தொலைநகல் இல - 021 221 9940)

**தொடர்பு கொள்ளும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்:-**
கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதி மற்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

08.5 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. மேலும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன் இவை தொடர்பான அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது.

## 09.ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமா்ப்பிக்கத்தவறும் பரீட்சாா்த்தியொருவரின் பரீட்சாா்த்தி உரிமை செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

## 10.பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமா்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தா்ப்பத்திலும் அவா் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11.கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத்தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்திய பிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா **498,960.00** க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், சமய பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள சமயகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 12.பரீட்சைத்திட்டம் :-

இப் பரீட்சை கீழ்வருமாறு இருபகுதியான வினாக்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும். எனினும் தகைமையடைந்த சிங்கள மொழி மூல விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்து சிங்கள மொழி மூலத்திலும் பரீட்சை நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னா் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பாடவிதானங்கள் வருமாறு:-

| இல | பகுதி | பாடவிபரம் | பாட விதானம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 01. | பகுதி I | மொழித் திறன் | சுருக்கம் எழுதுதல், கிரகித்தல், பிழைகளை கண்டறிதல் மற்றும் இலகுவான இலக்கணப்பயன்பாடு தொடர்பான பரீட்சார்த்தியின் அறிவை பரிசோதிக்கும் வினாக்களைக் கொண்டிருக்கும் | 01மணித் தியாலம் | 50 |
| 02. | பகுதி II | பொதுஅறிவு | இவ் வினாத்தாளானது பொருளாதார, அரசியல், சமூக, கலாசார மற்றும் தொழில்நுட்பவியல் விடயங்கள் தொடர்பில் உள்ளூர் மற்றும் சர்வதேசரீதியில் விண்ணப்பதாரியின் அறிவினைப் பரீட்சிப்பதாக அமையும். | 01மணித் தியாலம் | 50 |

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகத் தேர்விற்கு தகைமை பெறுவதற்காக குறைந்தபட்சம் **நாற்பது வீத(40%) புள்ளிகளை** பெற்றுக்கொள்ளல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

13. பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவா்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாணசபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும் என்பதுடன் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தனித் தனியாக தபால் மூலமாகவும் அனுப்பிவைக்கப்படும்.

14. இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

15. இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**சி.திருவாகரன்**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
15.02.2021

## வடக்கு மாகாண பொதுச்சேவையின் சமூக சேவை உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

வடக்கு மாகாண பொதுச்சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர் பதவிக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 05.03.2021 ஆகும்.

### 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

02.1 2016.12.10 ஆம் திகதியில் செயல்வலுவிலுள்ள சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பு /ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30**ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் **சமூக சேவை உத்தியோகத்தர்** பதவியின் தரம் II இற்கு நியமிக்கப்படுவர்.

02.2 போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்ற பரீட்சார்த்திகள் உயர்புள்ளி வரிசை ஒழுங்கில் வெற்றிட எண்ணிக்கைக்கேற்ப பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் தரம் II பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு மேற்குறித்த பதவிகளின் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 இச்சேவைகள் இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

02.4 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை **பத்து (10)** ஆகும். எனினும் அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார். **நிலவும் வெற்றிடத்தின் 70%** திறந்த போட்டிப்பரீட்சை மூலம் நிரப்பப்படும்.

### 03 சம்பள அளவுத்திட்டம் :-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 5 - 2016**க்கு ஏற்ப சமூக சேவை உத்தியோகத்தர் பதவியின் தரம் - IIஇற்கான திரட்டிய சம்பள விகிதமானது **ரூபா 34,605 – 10 x 660 - 11 x 755 - 15 x 930 – 63, 460/-** ஆகும். (ரூபா 36,585/-என்ற 3வது சம்பள படிநிலைக்கு முன் 1வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்)

### 04 பொதுவான தகைமைகள் :-

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.3 **அ)** விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

**ஆ)** விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும் **(*நேர்முகப் பரீட்சையின் போது தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)**

04.4 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

04.5 திறந்த போட்டிப்பரீட்சைக்குரிய விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று **21 வயதிற்கு** குறையாதவராகவும், **35 வயதிற்கு** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## 05. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :-

சமூகவியல் (Sociology) / சமூகவிஞ்ஞானம் (Social Science) / சமூகப்பணி (Social Works)/ சமூக உடற்கூறியல் (Social Anatomy) / சமூகஉளவியல் (Social Psychology) / பொருளியல் (Economics) / புவியியல் (Geography) ஆகியவற்றில் யாதாயினும் ஒன்றை ஒரு பாடமாகக் கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பல்கலைக்கழகப் பட்டம்.

## 06. ஆட்சேர்ப்பு முறை :-

06.1 எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை ஒவ்வொரு பாடத்திலும் பெற்றுக்கொள்ள வேண்டும். எழுத்துப்பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாக சமூகசேவை உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான நேர்முகப்பரீட்சைக்கு பரீட்சார்த்திகள் அழைக்கப்படுவர். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் பதவிக்கு தகைமையீனமாக கருதி இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

## 07. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா 500.00 ஐ **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்”** அவர்களின் **“3401”** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :-

08.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீx29செ.மீ) தாளின் 1 முதல்10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 11 முதல் 15 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும், ஏனையவை மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **05.03.2021** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 விண்ணப்பம் அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“சமூக சேவை உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021”** எனக்குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

08.3 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.**

08.4 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அடடைகள் அனுப்பப்பட்டதும் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று (03) நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல -021 221 9939, தொலைநகல் இல -021 221 9940)

**தொடர்பு கொள்ளும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்:-**

கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதி மற்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

08.6 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. மேலும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் இவ்விடயம் தொடர்பான அறிவித்தல் எதுவும் வழங்கப்படமாட்டாது.

## 09.ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளா் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமா்ப்பிக்கத்தவறும் பரீட்சாா்த்தியொருவரின் பரீட்சாா்த்தி உரிமை செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

## 10.பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமா்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தா்ப்பத்திலும் அவா் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத்தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியபிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா **498,960.00** க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், சமய பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள சமய குருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

12.பரீட்சைத் திட்டம் :-

இப் பரீட்சை கீழ்வருமாறு மூன்று வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும். எனினும் தகைமையடைந்த சிங்கள மொழி மூல விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்து சிங்கள மொழி மூலத்திலும் பரீட்சை நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பாடவிதானங்கள் வருமாறு.:-

| *இல* | *வினாப் பத்திரம்* | *பாட விதானம்* | *நேரம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01. | உளச்சார்பு | இவ்வினாத்தாள் விண்ணப்பதாரரின் கணக்குத் திறன், தர்க்கிக்கும் திறன், முடிவெடுக்கும் திறன், பகுப்பாயும் திறன்ஆகியவற்றைப் பரீட்சிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02. | பதவியுடன் தொடர்புடைய பொதுஅறிவு | தேசிய மற்றும் சர்வதேசரீதியாக அரசியல், பொருளாதார மற்றும் நலிந்தவர்களின் சமூக பாதுகாப்பு ஆகியவற்றோடு தொடர்புடைய நடைமுறை விடயங்களில் பரீட்சார்த்திகளின் அறிவை அளவிடுவதாக அமையும். | 01மணித்தியாலம் | 100 |
| 03 | கட்டுரையும் சுருக்கம் எழுதுதலும் | தற்போதைய சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகள் நலிந்தவர்களின் சமூக பாதுகாப்பு தொடர்பான விடயங்களை உள்ளடக்கியிருக்கும். | $01^1/_2$ மணித்தியாலங்கள் | 100 |

13. பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாணசபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

14. இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

15. இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lkஎன்ற வடக்கு மாகாணசபை இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**சி.திருவாகரன்**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
15.02.2021

## வடக்கு மாகாண பொதுச் சேவையின் சைகைமொழிபெயர்ப்பாளர் தரம்III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

வடக்கு மாகாண பொதுச்சேவையின் **சைகைமொழிபெயர்ப்பாளர்** தரம் III பதவிக்கு நிலவும் **ஒரு(01)** வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 05.03.2021 ஆகும்.

### 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

02.1 **2019.04.06**ஆம் திகதியிலிருந்து செயல்வலுவிலுள்ள மாகாண இணைந்த சேவையில் **சைகைமொழிபெயர்ப்பாளர்** பதவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30**ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் மற்றும் எதிர்காலத்தில் இவற்றில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்தி **சைகைமொழிபெயர்ப்பாளர் தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர்.

02.2 போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் நியமனத்திகதியிலிருந்து மூன்று(03) வருடங்களிற்கு தகுதிகாண்கால அடிப்படையில் **சைகைமொழிபெயர்ப்பாளர் தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு **சைகைமொழிபெயர்ப்பாளர் தரம் III** பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து **மூன்று** (03) வருட காலத்திற்குள் **முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில்** சித்தியெய்தல் வேண்டும்.

02.3 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

### 03. சம்பள அளவுத்திட்டம் :-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 1 - 2016**க்கு ஏற்ப **சைகைமொழிபெயர்ப்பாளர் தரம் III** பதவிக்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **27, 140 – 10 x 300 - 11 x 350 - 10 x 495 – 10 x 660 – 45, 540**/-ஆகும். (ரூபா 28,040 என்ற சம்பள படிநிலைக்கு முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்)

### 04. பொதுவான தகைமைகள் :-

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.3 **அ)** விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

**ஆ)** விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும் **(*நேர்முகப் பரீட்சையின் போது தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)**

04.4 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

## 05. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :-

**(அ) கல்வித் தகைமைகள் :-**

க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் **ஒரே அமர்வில் மொழி** (தமிழ் / சிங்களம்/ஆங்கிலம்), **கணிதம்** உள்ளடங்கலாக **நான்கு (04)** பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**அத்துடன்**

க.பொத. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது **ஒரு(01)** பாடத்தில் (பொதுப்பரீட்சை, பொதுஆங்கிலம் தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**(ஆ) தொழில்சார் தகைமை:-**

விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது ஆறு (06) மாதத்திற்கு குறையாத சைகை மொழிபெயர்ப்பு தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் கற்கைநெறியினை அரச நிறுவனம் ஒன்றில் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வெண்டும்.

**(இ) வயதெல்லை :-**

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **பதினெட்டு வயதிற்கு** (18) குறையாதவராகவும், **முப்பது வயதிற்கு** (30) மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## 06. ஆட்சேர்ப்பு முறை :-

06.1 எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை ஒவ்வொரு பாடத்திலும் பெற்றுக்கொள்ள வேண்டும். எழுத்துப்பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாக **சைகைமொழிபெயர்ப்பாளர் தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் விண்ணப்பதார்களிடம் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது கோரப்பட்ட சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

06.2 மேற்படி எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நிலவும் வெற்றிடத்திற்கமைவாக நியமனத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படுவர்.

## 07. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா 500.00 ஐ **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்”** அவா்களின் **“3401”** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :-

08.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீx29செ.மீ) தாளின் 1 முதல்10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 11 முதல் 15 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **05.03.2021**ஆந் திகதி

அல்லது அதற்கு முன்னா் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 விண்ணப்பப் படிவம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சைகைமொழிபெயர்ப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

08.3 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணபத்தின் நிழற்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளா் அவா்களினால் அனுப்பிவைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.**

08.4 விண்ணப்பங்களைச் சமா்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று (03) நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின், அனுமதி அட்டை கிடைக்காமை தொடர்பில் கீழ்வரும் குறிப்பிலுள்ள விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகம், வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல - 021 221 9939, தொலைநகல் இல - 021 221 9940)

**தொடர்பு கொள்ளும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்:-**

கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதி மற்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

08.5 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. மேலும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன் இவை தொடர்பான அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது.

## 09.ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளா் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை

(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.

(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமா்ப்பிக்கத்தவறும் பரீட்சாா்த்தியொருவரின் பரீட்சாா்த்தி உரிமை செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

## 10.பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமா்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தா்ப்பத்திலும் அவா் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11.கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத்தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்திய பிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா **498,960.00** க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், சமய பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள சமயகுருமாா் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 12.பரீட்சைத்திட்டம் :-

இப் பரீட்சைகள் கீழ்வருமாறு இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும். எனினும் தகைமையடைந்த சிங்கள மொழி மூல விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்து சிங்கள மொழி மூலத்திலும் பரீட்சை நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னா் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பாடவிதானங்கள் வருமாறு.

| இல | வினாப் பத்திரம் | பாட விதானம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | உளச்சார்பு | எண்கணிதம் மற்றும் தர்க்கரீதியான விடயங்கள் மற்றும் பொதுஉளச்சார்பு தொடர்பான பரீட்சார்த்தியின் அறிவை பரிசோதிக்கும் வினாக்களைக் கொண்டிருக்கும் | 01 மணித்தியாலம் | 100 |
| 02. | மொழித் திறன் | சுருக்கம் எழுதுதல், கிரகித்தல், பிழைகளை கண்டறிதல் மற்றும் இலகுவான இலக்கணப்பயன்பாடு தொடர்பான பரீட்சார்த்தியின் அறிவை பரிசோதிக்கும் வினாக்களைக் கொண்டிருக்கும் | 01மணித்தியாலம் 30 நிமிடங்கள் | 100 |

13. பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவா்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாணசபையின் இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தனித் தனியாக தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

14. இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

15. இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாணசபையின் இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**சி.திருவாகரன்**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
15.02.2021